# சோபியாவிடம் கேள்வி கேட்டு போலீசார் சித்ரவதை

## ஹென்றி டிபேன் குற்றச்சாட்டு

தூத்துக்குடி, செப். 7-
பாஜவை எதிர்த்து கோஷமிட்டதாக போலீஸ் அதிகாரிகள் சோபியாவை கைது செய்ததில் எதுவுமே சட்ட ரீதியில் நடக்கவில்லை. விசாரணையில் அவரை சித்ரவதை செய்யக்கூடிய அளவிற்கு போலீசார் கேள்விகள் கேட்டுள்ளதாக மக்கள் கண்காணிப்பகம் ஒருங்கிணைப்பாளர் ஹென்றி டிபேன் குற்றம்சாட்டினார்.

மக்கள் கண்காணிப்பகம் ஒருங்கிணைப்பாளர் ஹென்றி டிபேன் நேற்று தூத்துக்குடியில் அளித்த பேட்டி:

பொதுவாக விமானத்தில் சோபியா கை தூக்கி கோஷம் இட்டதாக வெளியாகியுள்ள தகவல்களை மறுக்கிறோம். சோபியா 8வது எண் இருக்கையில் பயணித்துள்ளார். தமிழிசை 3 எண் இருக்கையில் இருந்துள்ளார். விமானத்தில் இருந்து இறங்கும் போது தான் அந்த கருத்தை சோபியா தெரிவித்துள்ளார். இதனை அவர்கள் திரித்து விமானத்தினுள் கோஷம் போட்டதாக தெரிவித்துள்ளார். அங்கு கோஷமிட்டிருந்தால் விமான பணிப்பெண், பைலட் தான் புகார் தெரிவித்திருக்க வேண்டும்.

விமானத்திலிருந்து இறங்கி வரவேற்பு அறையில் வரும் போதே பாஜகவினர் சூழ்ந்து கொண்டு அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி, மிரட்டி சோபியா மன்னிப்பு கோர வேண்டும் என்று கோசமிட்டுள்ளனர். ஆனால் அவர் மன்னிப்பு கோர விரும்பவில்லை எனக்கு பேச்சுரிமை உள்ளது என கூறி வெளியே வரும் போது தான் அங்கு பாதுகாப்பிற்காக இருந்த இன்ஸ்பெக்டர் நித்யா அவர்களை வருகையாளர்கள் அறைக்கு அழைத்து வந்துள்ளார். அங்கு இருந்த போதும் பாஜகவினர் மிரட்டும் தொனியில் பலமுறை போட்டோ எடுத்துள்ளனர்.

பின்னர் அங்கு வந்த சில போலீஸ் அதிகாரிகள் சோபியாவை கைது செய்துள்ளனர். அரெஸ்ட் மெமோ கூட அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. விசாரணைக்கான சம்மனும் கொடுக்கப்படவில்லை. எல்லாமே சட்ட ரீதியில் நடக்கவில்லை.

மதியம் 1.30 மணியில் இருந்து இரவு 7.30 மணி வரையில் விசாரித்துள்ளனர். அங்கு விசாரணையில் இருந்த 2 பெண் இன்ஸ்பெக்டர்களை தவிர பிற அனைவருமே ஆண்கள். சித்திரவதை செய்யக்கூடிய அளவிற்கு அவரை கேள்விகள் கேட்டுள்ளனர்.

அதற்கு பின்னர் 5 மணிக்கு கைது செய்யப்பட்டதாக கையெழுத்து வாங்கியுள்ளனர். அதில் 2 பிரிவுகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை காவல் நிலையத்தில் சோபியாவின் பழைய பாஸ்போர்ட் பெறப்பட்டுள்ளது. அது கோர்ட்டில் ஒப்படைக்கப்படவில்லை. அவரது தந்தைக்கு சம்மன் கொடுத்து புதிய பாஸ்போர்ட்டை கேட்டுள்ளனர். புதுக்கோட்டை காவல் நிலையத்தில் உள்ள சோபியாவின் முதல் பாஸ்போர்ட்டை பத்திரமாக வழங்கும் பொறுப்பு எஸ்பிக்கு உள்ளது.

ஒரு சிறிய 75 எம்சிபிஏ கேசில் பாஸ்போர்ட்டை கேட்டுள்ளது இந்த வழக்கில் தான் இருக்கும். இந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும்.

மேலும் தமிழிசை மற்றும் பாஜகவினர் மீது மோசமான வார்த்தைகளை பயன்படுத்தியதற்காக தீண்டாமை வழக்கு பதிவு செய்திருக்கவேண்டும். இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு செல்ல இருக்கிறோம் என்றார். பேட்டியின் போது சோபியா, அவரது பெற்றோர், வக்கீல் அதிசயகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடியில் மாணவி சோபியாவை சந்தித்த பின் மக்கள் கண்காணிப்பக நிர்வாக இயக்குனர் ஹென்றி டிபேன் பேட்டியளித்தார். அருகில் மாணவி சோபியா, அவரது தந்தை டாக்டர் சாமி.

தமிழ் முரசு
Fri, 07 September 2018
tm.dinakaran.com/c/31970128